# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 06–ம் நாள் வியாழக் கிழமை

**IA 7/2024 /in/ OS 98 /2019**

( Original Suit CNR No. TNTH06–000–160–2019)

1. ராசுத்தேவர்
2. பழனிச்சாமி :: மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள்

**/எதிர்/**

1. ராமசாமி :: 1–ம் எதிர்மனுதாரர் / வாதி

2. வட்டாட்சியர், உத்தமபாளையம்
3. வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம்.
4. மாவட்ட வருவாய் அலுவலர், தேனி.
5. மாவட்ட ஆட்சியர், தேனி.
6. வட்டார வளர்ச்சி அலுவலர், (ஊராட்சிகள்) உத்தமபாளையம், ஊராட்சி ஒன்றியம்.

:: 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் / 3 முதல் 7 பிரதிவாதிகள்.

---------

இம்மனுவானது 08.01.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முருகதினகரன், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதார் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஜோதிமுருகதாஸ்,B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.போதுராஜா, அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:06:34 +0300

## உத்தரவு

உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்களை வழக்குரை சொத்துக்களில் ஆணைமலையன்பட்டி என்ற மல்லிங்காபுரம் கிராமம், சர்வே எண்கள் 453/40, 453/11, 453/39 மற்றும் 453/12 சம்பந்தப்பட்ட கிராம கோப்புகளுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடவேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1(3)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்.**

அசல் வழக்கினை வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருப்பதாகவும், மூல வழக்கில் 1–ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், அசல் வழக்கில் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், அவ்வாறு அளவை பணி செய்தபோது கிராம நிர்வாக அலுவலகத்தில் இருக்கும் புல வரைபடத்தை வைத்து அளவீடு செய்யாமல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட புல வரைபடத்தை வைத்து அளவீடு செய்திருப்பதாகவும், இணைய பதிவேற்றம் செய்யப்பட்ட புல வரைபடத்தின் அளவுகள் கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகத்தில் உள்ள புலவரைபடத்தின் அளவுகளுடன் மாறுபட்டு அமைந்திருப்பதாகவும், இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியிருப்பதால் கிராம நிர்வாக அலுவலரை அசல் வழக்கில் சாட்சியாக அழைத்து பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சமயத்தில் அவர் தன்னிடம் உள்ள புல வரைபடம் கிழிந்த நிலையில் இருப்பதால் அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க இயலாது என தெரிவித்து விட்டதால், மேற்படி புல வரைபடத்தின் மற்றொரு நகல் பராமரிக்கப்பட்டு வரும் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அதனை எடுத்து வந்து சாட்சியளிக்க வேண்டியது அவசியமாக இருப்பதாகவும், அதனால் மல்லிங்காபுரம் கிராம சர்வே எண்.453/40, 453/11, 453/39 மற்றும் 453/12 சம்பந்தப்பட்ட கிராம கோப்புகளுடன்

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.03.06 10:06:41 +0300

நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்கும்படி வட்டாட்சியருக்கு உத்தரவிடுமாறு வேண்டப்பட்டது.

3) **<u>1 –ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

கிராம நிர்வாக அலுவலர் புல வரைபடம் கிழிந்து போய்விட்டதாக கூறியுள்ளது தவறு என்றும், இருந்தாலும் வட்டாட்சியர் அலுவலகம் சென்று வரைபடத்தை சான்றிதழ் பெற்று தாக்கல் செய்யாமல் வட்டாட்சியரை சாட்சியாக அழைக்கக் கோருவது அசல் வழக்கில் காலதாமதம் செய்யும் நோக்கம் கொண்டது என்றும், அசல் வழக்கை காலதாமதம் செய்து இழுத்தடிக்கும் எண்ணம் கொண்டு இம்மனுவினை தாக்கல் செய்திருப்பதாகவும், அதனால் இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் வேண்டப்பட்டுள்ளது.

4) **<u>2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

மனுஉரைச் சங்கதிகள் தவறானவை என மறுத்தும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை குறித்து தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையில் சர்வேயர் இணைய வழி புலவரைபடத்தின் அடிப்படையில் அளவீடு செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், கிராம நிர்வாக அலுவலர் அவரது அலுவலக ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியமளித்திருப்பதாகவும், நான்கு ஆண்டுகளுக்கு முன்புவழக்குச் சொத்து அளவீடு செய்யப்பட்ட போது கிராம நிர்வாக அலுவலர் வழக்குச் சொத்தை பார்வையிட்ட போது மேற்படி புலவரைபடம் கிழிந்து இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றும், இவ்வழக்கில் தரப்பினர்களான 3 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்க வாய்ப்பு வழங்குவதற்கு முன்பு 3–ம் பிரதிவாதியை 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாக முன்னிலையாக கோரியிருப்பது அசல் வழக்கினை திசை திருப்பும் நோக்கம் கொண்டது என்றும், அதனால் இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் வேண்டப்பட்டுள்ளது.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:06:48 +0300

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**6)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் , சான்றாவணங்கள் இல்லை.

**7)** **<u>பிரச்னைக்கான தீர்வு:</u>**

07–01) மனுதாரர்கள் தரப்பு மனு உரையில் நீதிமன்ற ஆணையர் மனுச் சொத்தினை பார்வையிட்ட போது கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த புல வரைபடத்தை பார்வையிடாமல் இணைய பதிவேற்றம் செய்யப்பட்ட புலவரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு அளவீடு செய்ததாகவும், பதிவேற்றம் செய்யப்பட்ட புல வரைபடம் அளவுகள் தவறானது என குறிப்பிட்டு மனு அளித்திருப்பதாகவும், அதனை நிரூபிக்க கிராம நிர்வாக அலுவலர் சாட்சியாக அழைத்த போது அவர் பி.வா.சா.2 ஆக முன்னிலையாகி சாட்சியம் அளித்த சமயத்தில் தன்னிடம் உள்ள வரைபடம் கிழிந்து இருப்பதாகவும், அதன் அடிப்படையில் சாட்சியமளிக்க இயலாது என்று கூறிவிட்டதாகவும், அதனால் வட்டாட்சியர் அவரது அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் புல வரைபடத்தினை எடுத்து வந்து சாட்சியமளிக்க உத்தரவிடுமாறு வேண்டப்பட்டுள்ளது.

07–02) இதுகுறித்து வாதி தரப்பு முக்கிய எதிர்வாதம் யாதெனில், மனுதாரர்கள் வேண்டுமென்றே காலதாமதம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் இம்மனுவினை தாக்கல் செய்து நடத்தி வருகின்றனர் என்பதாகும். இதனை அடுத்து 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பு முக்கிய எதிர்வாதம் யாதெனில், நீதிமன்ற ஆணையர் மனுச் சொத்தினை பார்வையிட்டபோது அலுவலக புல வரைபடத்தின் அடிப்படையில் அளவீடு செய்யாமல், இணைய பதிவேற்றம் செய்யப்பட்ட புல வரைபடத்தில் கண்ட அளவுகளின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றும், அதேபோல 3–ம் பிரதிவாதியான வட்டாட்சியரை 1, 2 பிரதிவாதிகள் தங்கள் தரப்பில் சாட்சியாக அழைக்க

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:06:54 +0300

உத்தரவிடுமாறு வேண்டி உள்ளது ஏற்புடையதல்ல என்றும், அதன்படியும் இம்மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

07–03) இதுகுறித்து பரிசீலிக்கையில், உண்மையில் மனுதாரர்கள் ஏற்கனவே இடைமனு எண்.6/2024 தாக்கல் செய்து கிராம நிர்வாக அலுவலரை சர்வே எண்கள்.453/40 453/11 451/39 மற்றும் 459/12 ஆகியவை குறித்து கிராம கோப்புகளுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க உத்தரவிடுமாறு வேண்டப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர் சாட்சியாக முன்னிலையாகி சாட்சியமளித்த சமயத்தில், தன்னிடம் உள்ள புலவரைபடம் கிழிந்து இருப்பதாக சாட்சியம் அளித்து இருப்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. எனவே, மேற்படி புலவரைபடம் குறித்து அது பராமரிக்கப்படும் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து எடுத்து வந்து சாட்சியம் அளிக்கும்படி வட்டாட்சியரை உத்தரவிடக் கோரி இருப்பது ஏற்புடையதாக தோன்றுகிறது.

07–04) இவ்வாறான சூழலில், 3 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதம் குறித்து பரிசீலிக்கையில் 3–ம் பிரதிவாதி இங்கு அவரது தனிப்பட்ட நிலையில் தரப்பினராகச் சேர்க்கப்படாமல் அவரது அலுவலக பொறுப்பின் அடிப்படையிலேயே தரப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், மேற்படி புல வரைபடம் என்பது மனுதாரர்கள் தரப்பில் தீர்மானிக்க மிகவும் அவசியமான ஆவணம் என்பது போன்று தெரிவித்து வாதம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த ஆவணத்தின் பாதுகாவலரான வட்டாட்சியரை அசல் வழக்கில் சாட்சியாக முன்னிலையாக கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், அப்போதுதான் அசல் வழக்கில் முழுமையான மற்றும் அறுதியான தீர்வினை எட்டுவதற்கு வசதியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட விவாதத்தின் முடிவாக இம்மனுவினை அனுமதித்திட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.03.06 10:07:01 +0300

8) இறுதியாக,

| | |
|---|---|
| 1. | இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்டுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 06.03.2025-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.03.06 10:07:10 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**<u>இரு தரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை.</u>**

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.03.06 10:07:16 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

IA 7/2024
in
O.S. 98/ 2019
FAIR / DRAFT ORDER
Date : 06.03.2025

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் வியாழக் கிழமை

**IA 7/2024 /in/ OS 98 /2019**
( Original Suit CNR No. TNTH06-000-160-2019)

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ஆணைமலையன்பட்டி கிராமம், வார்டு-2, மந்தையம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் வீரணத்தேவர் அவர்களின் மகன் இந்து சுகவாசம் சுமார் 78 வயதுள்ள ராசுத்தேவர். |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ஆணைமலையன்பட்டி கிராமம், வார்டு-2, மந்தையம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் வீரணத்தேவர் அவர்களின் மகன் இந்து சுகவாசம் சுமார் 73 வயதுள்ள பழனிச்சாமி. |

.... மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள்

| | |
|---|---|
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ஆணைமலையன்பட்டி கிராமம், வார்டு-2, கதவு எண்.37, மந்தையம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் ராமசாமித்தேவர் அவர்களின் மகன் இந்து சுகவாசம் சுமார் 71 வயதுள்ள முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் இராமசாமி. |

1-ம் எதிர்மனுதாரர் / வாதி

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, உத்தமபாளையம் டவுன், வட்டாட்சியர் அலுவலகத்திலிருக்கும் அதன் வட்டாட்சியர் மூலம். |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, உத்தமபாளையம் டவுன், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருக்கும் அதன் வருவாய் கோட்டாட்சியர் மூலம். |
| 3 | தேனி மாவட்டம், தேனி தாலுகா, தேனி டவுன், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட வருவாய் அலுவலகத்திலிருக்கும் அதன் மாவட்ட வருவாய் அலுவலர் மூலம். |
| 4 | தேனி மாவட்டம், தேனி தாலுகா, தேனி டவுன், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட வருவாய் அலுவலகத்திலிருக்கும் அதன் மாவட்ட வருவாய் அலுவலர் மூலம். |

| | |
|---|---|
| 5 | தேனி மாவட்டம், தேனி தாலுகா, தேனி டவுன், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருக்கும் தேனி மாவட்ட ஆட்சியர் மூலம். |
| 6 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, உத்தமபாளையம் டவுன், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம். |

. .. 2 முதல் 6 எதிர்மனுதார்கள் / 3 முதல் 7 பிரதிவாதிகள்

உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்களை வழக்குரை சொத்துக்களில் ஆணைமலையன்பட்டி என்ற மல்லிங்காபுரம் கிராமம் சர்வே எண்கள் 453/40, 453/11, 453/39 மற்றும் 453/12 சம்பந்தப்பட்ட கிராம கோப்புகளுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடவேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1(3)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 11.12.2024 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/– செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 08.01.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முருகதினகரன், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதார் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஜோதிமுருகதாஸ்,B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.போதுராஜா,அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**<u>நிறைவேற்றாணை</u>**

| | |
|---|---|
| 1. | இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்டுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

2025–ம் வருடம் மார்ச் மாதம் 06–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

EX ORDER
Date : 06.03.2025